# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, PALLAVARAM.

Case No. 607/2023

Old No.530/2007

PW-

| | |
|---|---|
| Name | : Tmt. Shakila |
| Father/Husband Name | :Mohamed Gows |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 of the day of 12.01.2024.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது குரோம்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான ஜூடி அபிதேவ் என்பவர் சிறப்பு பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளதால் கோப்புகளின் அடிப்படையில் மனுவின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 12.05.2007 அன்று 21.30 மணிக்கு குரோம்பேட்டை மருந்துவமனையிலிருந்து வந்த செய்தி மூலமாக கிஷ்ஜோர் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றேன். **அந்த புகார் வாக்குமூலம் அசாஆ 8 ஆகும்.** நிலைய குற்ற எண் 1540/2007 இதச 341,324,506(2) கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அசாஆ9** ஆகும். பின்னர் பெரனிக்கா, வேல்ஸ், மதன், பாலு வாசுதேவன், அலெக்சாண்டர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் இவ்வழக்கின் 1 ம் எதிரியை 15.05.2007

அன்று 7வது தெரு, நியூ காலணி, குரோம்பேட்டையில் வைத்து கைது செய்தார். சாட்சிகள் வேலு மற்றும் சங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 10 ஆகும். அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தில் வைத்து வெட்டு கத்தியை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜர் அசாஆ 11 ஆகும். பின்னர் இவ்வழக்கின் 2 ம் எதிரியை 13.05.2007 அன்று 7வது தெரு, நியூ காலணியில் வைத்து கைது செய்தார். சாட்சிகள் வேலு மற்றும் சங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 12 ஆகும். அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தில் வைத்து வெட்டு கத்தியை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜர் அசாஆ 13 ஆகும். பின்னர் சம்பவயிடத்தை சாட்சிகள் சுரேஷ் மற்றும் ராமன் ஆகியோர்களை முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தார். **அவை முறையே அசாஆ 14 மற்றும் 15 ஆகும்.** பின்னர் அசா1 க்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் ஜெயநந்தின் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றார். அவருக்கு காயச்சான்று அளித்த மருத்துவர் பாலகிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவர் அளித்த காயச்சான்றிதழ் கொடுங்காயம் என சான்று வழங்கப்பட்டுள்ளது. **அந்த காயச்சான்றிழ் அசாஆ 16 ஆகும்.** வழக்கு சொத்தான வெட்டு சாபொ 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்பட்டள்ளது. காயச்சான்றிதழின் அடிப்படையில் வழக்கின் சட்ட பிரிவுகளை 341,326,506(2) ஆக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்றல் அறிக்கை தயார் செய்தார். **அந்த பிரிவு மாற்றல் அறிக்கை அசாஆ 17 ஆகும். வழக்கின் விசாரணை முடித்து 20.06.2007 ம் ஆண்டு** இறுதியறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் அப்போதைய விசாரணை அதிகாரி முபமையாக விசாரணை செய்துள்ளார். விசாரணை அதிகாரி நேரடியாக சென்று விசாரித்தாரா என்று நேரடியாக தெரியுமா என்றால் இல்லை. வழக்கு சம்பவம் 12.05.2007 இரவு 9.30 மணிக்கு நடைப்பெற்றதா என்றால் ஆம். வழக்கு சம்பவம் நடைப்பெற்றவுடன் சம்பவயிடத்திற்கு சென்று விசாரணை செய்யப்பட்டதா என்றால் ஆம். குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் கொடுத்த சான்றுகளின் அடிப்படையில் அப்போதைய விசாரணை அதிகாரி விசாரணை செய்தார். வழக்கு கோப்புகளில் ஸ்டான்லி அரசு மருத்துவமனையிலிருந்து வாக்குமூலம் பெற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்றால் ஆம்.

வழக்கு கோப்புகளில் காயமுற்ற நபருக்கு இடது கையில் அடிப்பட்டதாக காணப்படுகிறது. வழக்கு கோப்புகளில் புகார்தாரரை 5 நபர்கள் கொண்ட கும்பல் அடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

ஆம். 2ம் ஆஜர் எதிரி சம்பவயிடத்தில் இல்லை என்றும் வழக்கு சம்பவத்திற்கு தொடர்பில்லை என்றால் சரியல்ல. அரசு தரப்பு சாட்சிகள் 8 மற்றும் 9 முன்னிலையில் தான் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், அந்த இடத்தில் ஆஜர் எதிரி 1 மற்றும் 2 எதிரிகள் இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் ஆம். ஆஜர் 1 மற்றும் 2 எதிரியின் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx

District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.